## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி
## மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 30.07.2021ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.
## மன்றப் பொருள்

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.K.Dis.No.32976/J3/2018, நாள்:08.07.2019–ல் 52 ஒப்பந்த பணியாளர்களைக்கொண்டு தனியார் மூலம் துப்புரவு பணி செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின்படி, மேற்காண் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மூன்று வருடத்திற்கு அமர்த்திக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதற்கிணங்க, அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு, அவற்றில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள M/S.RELYON FACILITY SERVICES PVT.LTD, CHENNAI நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.147, நாள்.05.08.2019–ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் உத்திரவு, ந.க.எண்.5916/2018/எச்1, நாள்.13.08.2019ல் 14.08.2019 முதல் 13.08.2020 முடிய ஓராண்டிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. நகர்மன்ற தீர்மான எண்.121, நாள்.30.07.2020–ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறைகள் உத்திரவு, ந.க.எண்.5916/2018/எச்1, நாள்.30.07.2020ல் 14.08.2020 முதல் 13.08.2022 முடிய மேலும் ஓராண்டிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு,. அதன் ஒப்பந்த காலம் 13.08.2021 உடன் முடிவடைவதால், M/S.RELYON FACILITY SERVICES PVT.LTD, CHENNAI நிறுவனம் தனது 12.07.2021ம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணிபுரிய சம்மதம் தெரிவித்து, மேலும் ஓராண்டிற்கு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து தரக்கோரியுள்ளனர். நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அனுமதியளித்த மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் மட்டுமே முடிவுற்றுள்ளதால், பொது சுகாதார நலன் கருதி ஏற்கெனவே தனியார் மூலம் 52 ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணி செய்து வரும் M/S.RELYON FACILITY SERVICES PVT.LTD, CHENNAI நிறுவனத்திற்கு முந்தைய நிபந்தனைகளுக்குட்பட்டும், அதே விலை விகிதத்தின்படியும் 14.08.2021 முதல் ஓராண்டிற்கு கால நீட்டிப்பு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.87,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத் தொகையினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5916 /2018/எச்1)**

**தீர்மான எண். 81 நாள்.30.07.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**2.** நகராட்சி நிக்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.**4739/2017/சி1** நாள்.**18.11.2019** ம் தேதிய கடிதத்தில் நகராட்சிகள் சார்பாக திரு.லூர்துபால் மௌரியா வழக்கறிஞர் அவர்களை கொண்டு நடத்திட உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவின்படி இந்நகராட்சி சார்பாக வழக்கினை நடத்தி வரும் திரு.எஸ்.சரவணன் வழக்கறிஞர் அவர்களிடமிருந்து கீழ் கண்டுள்ள சொத்துவரி சம்மந்தமான வழக்கு கட்டுகளை திரு.லூர்துபால் மௌரியா நகராட்சி வழக்கறிஞரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்குகளை நடத்திட ஆகும் அனைத்து செலவுவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | திருவாளர்கள் | கோப்பு எண் | வழக்கு எண் |
|---|---|---|---|
| 1 | மேட்டூர் ஸ்பின்னிங் மில் நிறுவனம் | 7149/அ1/2003 | SA1350/2007& SA 1351/2007 |
| 2 | கே.பி.காதர் உசேன் | 7073/அ1/2012 | WPNO.29647/2012 |
| 3 | ஜெயலட்சுமி பிரராசிங் பிரைவேட் லிமிட் | 1974/அ1/2013 | WPNO.12443/2013 |
| 4 | கே.பி.சையத் பைரோஸ் | 4687/அ1/2014 | WPNO.24775/2014 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1974/2013/அ1)**

**தீர்மான எண். 82 நாள்.30.07.2021**

அனுமதிக்கப்பட்டது

**3. மேட்டூர் நகராட்சி. பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தும் வாகன வண்டி எண். TN 93 B 2151, TN 93 B 2156, TN 93 B 2101, TN 93 B 2135 மற்றும் TN 93 B 2160 ஆகிய ஐந்து மினி ஆட்டோக்கள் ஜனவரி 2019-ம் ஆண்டு கொள் முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது தற்பொது வாகனத்திலுள்ள டயர்கள் மற்றும் டீயப்புகள் சேதமடைந்துவிட்டதால் 25 எண்ணிக்கையிலான டயர்கள் மற்றும் 25 எண்ணிக்கையிலான டீயப்புகள் கொள் முதல் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பிபீட்டு தொகை ரூ.1,20,000/-க்குள் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1264 /2021 /இ1)**

**தீர்மான எண். 83 நாள்.30.07.2021**

அனுமதிக்கப்பட்டது

**4.** மேட்டூர் நகராட்சி. பொறியியல் பிரிவில் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கும் பணிக்கு பயன்படுத்தும் வாகன வண்டி எண்.TN 27 W 7915 (தண்ணீர் லாரி)-க்கான தகுதி சான்று பெற வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ.1,40,000/-க்குள் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1300 /2021 /இ1)**

**தீர்மான எண். 84 நாள்.30.07.2021**

அனுமதிக்கப்பட்டது

**5.** மேட்டூர் நகராட்சி. பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தும் வாகன வண்டி எண்.TN 93 B 2156 (மினி ஆட்டோ)-க்கு தகுதி சான்று முடிவடைந்து விட்டதால் தகுதி சான்று பெற வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பிபீட்டு தொகை ரூ.1,20,000/-க்குள் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1313 /2021 /இ1)**

**தீர்மான எண். 85 நாள்.30.07.2021**

அனுமதிக்கப்பட்டது

**6. மேட்டூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தும் வாகன வண்டி எண்.**TN 52 T 8604 (**காம்பேக்டர்**)-**க்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மற்றும் வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பிபீட்டு தொகை ரூ.**6,20,000/-**க்குள் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1231 /2021 /இ1)**

**தீர்மான எண். 86 நாள்.30.07.2021**

அனுமதிக்கப்பட்டது

**7. மேட்டூர் நகராட்சி. பொறியியல் பிரிவில் பயன்படுத்தும் வாகன வண்டி எண்.**TN 27 Y 2206 (**ஸ்வராஜ் மஸ்தா**)-**க்கு தகுதி சான்று முடிவடைந்து விட்டதால் தகுதி சான்று பெற வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பிபீட்டு தொகை ரூ.**1,18,000/-**க்குள் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1301 /2021 /இ1)**

**தீர்மான எண். 87 நாள்.30.07.2021**

அனுமதிக்கப்பட்டது

**8. இந்நகராட்சியின் உரக்கிடங்கில்** 5MT **திறன்கொண்ட உயிரி எரிவாயு கூடம் அமைக்கப்பட்ட நாளது தேதி வரையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி உயிரி எரிவாயு கூடத்தில் நிறுவப்பட்டுள்ள** Digester Unit **மேற்புற கூரை பழுதடைந்து, உருவாகும் மீத்தேன் வாயுவானது வெளியே வருவதால், தற்போது மின்சாரம் தயாரிக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் உயிரி எரிவாயு கூடத்தில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களில் பழுது ஏற்பட்டு, இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்த உயிரி எரிவாயு கூட** Digester **மேற்கூரை , மற்றும் இயந்திரங்களின் பராமரிப்பை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதீப்பிபீட்டு தொகை ரூ.**2,40,000/–**க்குள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மேற்கண்ட பணிகளில் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1591 /2021 /இ1)**

**தீர்மான எண். 88 நாள்.30.07.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**9.** மேட்டூர் நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் தங்களுக்கு வழங்க வேண்டிய பணப்பயன்களை வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No.2560/2019 மற்றும் W.P.No.30333/2019 தொடர்ந்து மேலும் வழக்கின் தீர்ப்பில் பணியாளர்களுக்கு உண்டான பணப்பயன்களை வாதியின் வழக்கறிஞரின் வாதுரையில் தெரிவித்துள்ள விவரப்படி உடன் வழங்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே வாதி வழக்கறிஞரின் வாதுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரத்தின் அடிப்படையில் தகுதியான ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு உரிய பணப்பபயன்கள் 6 நபர்களுக்கு சிறப்பு சேமநலநிதி தொகையும், 4 நபர்களுக்கு ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்புகளுக்கான ஊதியமும், 6–வது ஊதிய நிலுவை தொகை 20 நபர்களுக்கும், 1994–95 முதல் 2004–05 வரை வரையிலான காலங்களுக்கு சேமநலநிதி வட்டி தொகை 71 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2005–06 முதல் 2016–17 வரையிலான காலங்களுக்கு சேமநலநிதி வட்டி தொகை அனுமதிக்க கோரி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டதில் ந.க.எண்.ப.பா.1/15958/2020 நாள்:03.09.2020-ல் ரூ.9,41,411/- ஒப்பளிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ.9,41,411/- IFHRMS மென்பொருள் மூலம் நகராட்சி சேமநல நிதி கணக்கில் 29.01.2021 அன்று வரவாக்கப்பட்டு வழக்கின் வாதுரையில் குறிப்பிட்டுள்ள நபர்களில் 44 நபர்களுக்கு உண்டான தொகை கணக்கீடப்பட்டு IFHRMS மென்பொருள் வழியே பயனாளிகளுக்கு நேரடியாக வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஓய்வூதியர்கள் சங்கத்தினரின் வழக்கறிஞர் திரு.ஏ.ஆர்.நிக்சன் அவர்கள் எந்தவொரு பணப்பயன்கள் வழங்கப்படவில்லை என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதி மன்ற அவமதிப்பு வழக்கு Cont.P.No.738/2021 மற்றும் Cont.P.No.751/2021தொடர்ந்துள்ளார். வழக்கில் 2–ம் பிரதிவாதியாக நகராட்சி ஆணையாளர் அவர்களை சேர்க்கப்பட்டுள்ளதால், மேற்படி வழக்குகளை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு நகராட்சி நிலையான வழக்கறிஞர் (Standing Counsel) திரு.லூர்து பால் மௌரியா சென்னை அவர்களை கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை வழக்கறிஞர் ஏற்று நடத்தவும், வழக்கிற்காகும் வழக்கறிஞர் கட்டணம் முழுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.7292/பி2/2012)**

**தீர்மான எண். 89 நாள்.30.07.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**10.** 2020–2021 ஆம் நிதியாண்டிற்கான ஆண்டுக் கணக்கினை புதிதாக உருவாக்கப்பட்ட CWBS மென்பொருள் தயார் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்திடும் பொருட்டு, ஏற்கனவே இந்நகராட்சியின் ஆண்டுக் கணக்கினை கணினியில் தயார் செய்து தணிக்கைத் துறைக்கு சமர்ப்பித்த திரு.மு.அம்பேத்கார்

என்பவரையே 2020–2021 ஆம் நிதியாண்டிற்கும் நியமித்துக் கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச சேலவினம் ரூ.80000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1595/2021/பி1)**

**தீர்மான எண். 90 நாள்.30.07.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**11.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு உரிம இனங்களை 2021–2022 முதல் 2023–2024 முடிய உள்ள ஆண்டிற்கு ஏலம் விட்டு ஒப்படைக்கும் பொருட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையை அச்சடித்துக் கொள்ளவும், அதற்காகும் செலவினத்திற்கும் நகர்மன்றத் தீர்மானம் எண்.175, நாள்.30.12.2020 ல் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து அவசர அவசியம் கருதி உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று அச்சிட விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ.எண். | விலைப்புள்ளி வழங்கியவர் விவரம் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | பூபதி அச்சகம்,<br>8–36ஏ, கிழக்கு மெயின் ரோடு, (பழைய மார்க்கெட்),<br>மேட்டூர் அணை. | ரூ.100.00 |
| 2. | ஸ்ரீ வீரமாத்தியம்மன் பிரிண்டர்ஸ்,<br>கிழக்கு மெயின் ரோடு,<br>கமலம் இல்லம், 166–93, இந்திரா நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.110.00 |
| 3. | பரணி பிரஸ்,<br>இந்திரா நகர், மேட்டூர் அணை. | ரூ.115.00 |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் கண்டுள்ள விலைப்புள்ளி தொகையானது குறைவானது என்பதாலும், மேற்படி ஏல இனங்களை ஏலம் விட்டு ஒப்படைக்க வேண்டி உள்ளதாலும், அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள பூபதி அச்சகம், மேட்டூர் அணை என்ற அச்சகத்தாரின் விலைப்புள்ளியை உறுதி செய்து உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண். 91 நாள்.30.07.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**தனி அலுவலர்/ஆணையாளர்**
**மேட்டூர் நகராட்சி**

**12.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு உரிம இனங்களை 2021–2022 முதல் 2023–2024 முடிய உள்ள ஆண்டிற்கு ஏலம் விட்டு ஒப்படைக்கும் பொருட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலமோ, ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோராததால் கீழ்க்கண்ட உரிம இனங்களை துறை மூலம் வசூலிக்க நகர்மன்றத் தீர்மானம் எண்.66, நாள்.31.05.2021ல் அனுமதி பெறப்பட்டது.

1. மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்
2. மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3. மேட்டூர் புகைவண்டி நிலைய தினசரி மார்க்கெட்டில் கட்டப்பட்டுள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

4. மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள யானைப்புல் வளர்த்து அதன் பலன்களை அனுபவிக்கும் உரிமம்.
5. சேலம் கேம்ப் ஞாயிறு தோறும் கூடும் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

மேற்படி கட்டணம் வசூல் செய்யும் பொருட்டு இந்நகராட்சியில் ஏற்கனவே மேற்காணும் உரிம உரிம இனங்களுக்கு டிக்கெட் புத்தகங்கள் இருப்பில் இல்லாததாலும், துறை மூலம் உடன் வசூலிக்கப்பட வேண்டி இருந்ததாலும், அவசர அவசியம் கருதி உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று அச்சிட விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ.எண். | விலைப்புள்ளி வழங்கியவர் விவரம் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | பூபதி அச்சகம்,<br>8–36ஏ, கிழக்கு மெயின் ரோடு, (பழைய மார்க்கெட்),<br>மேட்டூர் அணை. | ரூ.27.50 |
| 2. | ஸ்ரீ வீரமாத்தியம்மன் பிரிண்டர்ஸ்,<br>கிழக்கு மெயின் ரோடு,<br>கமலம் இல்லம், 166–93, இந்திரா நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.30.50 |
| 3. | பரணி பிரஸ்,<br>இந்திரா நகர், மேட்டூர் அணை. | ரூ.31.50 |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் கண்டுள்ள விலைப்புள்ளி தொகையானது குறைவானது என்பதாலும், மேற்படி ஏல இனங்களை, நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு துறை மூலம் உடன் வசூலிக்க வேண்டி இருந்ததாலும், அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள பூபதி அச்சகம், மேட்டூர் அணை என்ற அச்சகத்தாரின் விலைப்புள்ளியை உறுதி செய்து உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தனி அலுவலர்/ஆணையாளர்**
**மேட்டூர் நகராட்சி**